www.Padasalai.Net www.TrbTnpsc.com

# காலாண்டு பொதுத்தேர்வு - 2019

V

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 2.30 மணி

## தமிழ் இரண்டாம் தாள்

மதிப்பெண்கள்: 100

(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி, கட்டுரை, கடிதம்)

பகுதி - I (மதிப்பெண்கள் 14)

I. பலவுள் தெரிக: 14 x 1 = 14

1. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
2. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.
   கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ________.
   அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ________.
   அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
   இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்
3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) திசைச்சொற்கள்
4. எட்வர்டு வந்தான் - இந்தச் சொற்றொடரில் அடிக்கோடிட்ட சொல் வகை யாது?
   அ) வினைச்சொல் ஆ) பெயர்ச்சொல் இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்
5. எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது ________ எனப்படும்.
   அ) தன்வினை ஆ) பிறவினை இ) துணை வினை ஈ) செய்வினை
6. 'தோசை வைக்கப்பட்டது' - இது எவ்வகைத் தொடர்?
   அ) செய்வினைத் தொடர் ஆ) செயப்பாட்டு வினைத் தொடர்
   இ) தன்வினைத் தொடர் ஈ) பிறவினைத் தொடர்
7. பகுபத உறுப்புகள் ________ வகைப்படும்.
   அ) எட்டு ஆ) ஆறு இ) ஐந்து ஈ) மூன்று
8. தனி வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களை ________ என்பர்.
   அ) கூட்டு வினை ஆ) தனி வினை இ) தன் வினை ஈ) முதல் வினை
9. கீழ்க்கண்டவற்றுள் கூட்டு வினைச் சொல்லைக் கண்டுபிடி.
   அ) படி ஆ) கண்டுபிடி இ) இரு ஈ) கொள்
10. கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை ________.
    அ) முதல் வினை ஆ) துணை வினை இ) தனி வினை ஈ) கூட்டு வினை
11. 'பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான்' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள வினையடியைக் கண்டுபிடி.
    அ) தள்ளு ஆ) காட்டு இ) கொடு ஈ) போடு
12. மொழிக்கு முதலில் வரும் வல்லின எழுத்துக்கள் ________.
    அ) க,ச,த,ப ஆ) ங,ஞ,ண,ந இ) ய,ர,ல,வ ஈ) ன,ம,ழ,ன
13. வல்லினம் மிகுந்து வருதல் ________ விகாரப் புணர்ச்சியின்பாற்படும்.
    அ) தோன்றல் விகாரப் புணர்ச்சி ஆ) திரிதல் விகாரப் புணர்ச்சி
    இ) கெடுதல் விகாரப் புணர்ச்சி ஈ) இயல்புப் புணர்ச்சி
14. எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும் - என்ற விதிக்கான சொல்லைத் தேர்ந்தெடுக்க.
    அ) இந்தக் காலம் ஆ) பத்துப்பாட்டு இ) கூவாக்குயில் ஈ) தீப்பிடித்தது

பகுதி - II (மதிப்பெண்கள் 20)

பிரிவு - 1

எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க: 5 x 2 = 10

15. சொற்களைத் தொடர்களாக மாற்றுக:
    இயங்கு - செய்வினை, செயப்பாட்டு வினைத் தொடர்களாக மாற்றுக.

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக.
    அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் _______ (திகழ்)
    ஆ) வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் _______ (கலந்து கொள்)
17. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.
    அ) இளமையில் கல்வி _______. ஆ) கற்றோர்க்குச் சென்ற _______.
18. கலைச்சொல் தருக:
    Comparative Grammar, Lexicon
19. சொல்லுக்குள் சொல் தேடுக:
    அ) எடுப்பார் கைப்பிள்ளை ஆ) பாய்மரக்கப்பல்
20. தொடர் தரும் பொருளை எழுதுக:
    சின்னக்கொடி, சின்னகொடி
21. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
    அ) நகமும், சதையும் ஆ) கண்ணும் கருத்தும்

பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க:** 5 x 2 = 10

*(28 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க)*

22. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
23. கூட்டு வினை என்றால் என்ன? சான்று தருக.
24. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
25. முதல் வினை என்றால் என்ன?
26. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
27. வல்லினம் மிகுமிடங்களுக்கு இரண்டு விதிகளைச் சான்றுகளுடன் எழுதுக.
28. கொள்வார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Padasalai

பகுதி - III (மதிப்பெண்கள் 50)

பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க:** 2 x 5 = 10

29. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
30. கீழ்க்கண்ட வினையடிகளைப் பயன்படுத்தி முதல் வினைத் தொடர்களையும், துணைவினைத் தொடர்களையும் எழுதுக:
    இரு, வை, கொள்
31. வல்லினம் மிகும் விதிகள் ஐந்தினைச் சான்றுடன் எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:** 4 x 5 = 20

*(37 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க)*

32. உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

| | | |
|---|---|---|
| அருண் | : | ஹலோ! நண்பா! |
| நளன் | : | _______________ |
| அருண் | : | ஆமாம்! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா? |
| நளன் | : | ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ? |
| அருண் | : | _______________ |
| நளன் | : | அந்த காலேஜ்லதான் என் தம்பி பஸ்டு இயர் படிக்கிறான். |
| அருண் | : | _______________ |
| நளன் | : | பை! பை! |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



33. குறிப்புகளைக் கொண்டு பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க.

அ) ஊர்தி ________ சென்றது.

ஆ) காலம் ________ ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை ________ காட்டுகிறது.

ஈ) இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் ________ காட்டுக.

(குறிப்புகள் : அழகாக, மெல்ல, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

34. பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக.

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) ________ மொழியாகும்.


ஆ) திராவிட மொழிகள் சில, பொதுப் பண்புகளைப் (பெறு) ________.

இ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) ________ மொழி தமிழ்.

ஈ) என் ஐயத்தைக் கேட்பதற்கு எவரேனும் கிடைக்கமாட்டார்களா என்று (தேடு) ________.

உ) நீ சொன்னால் அவன் கேட்டுக் (கொள்) ________.

35. படத்தைப் பார்த்து கவிதை எழுதுக.



36. பொருள் எழுதித் தொடர் அமைக்க:

அ) கரை, கறை ஆ) பரவை, பறவை இ) வாளை, வாழை

37. பாடலின் இலக்கிய நயத்தை உணர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிவில், காட்டில்
புல்வெளியில், நல் வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

- ம.இலெ.தங்கப்பா

i) பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

ii) எதுகைச் சொற்களை பாடலிலிருந்து எடுத்தெழுதுக.

iii) பாடலில் ம.இலெ.தங்கப்பா உணர்த்தும் மையக்கருத்து யாது?

iv) பாடலின் இயைபு நயத்தைக் குறிப்பிடுக.

v) பாடலில் இடம்பெற்றுள்ள சொல் நயத்தை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க:** 2 x 5 = 10

38. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



39. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி தருக.

40. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

பிரிவு - 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 2 x 5 = 10

41. வடிவம் மாற்றுக:

பின்வரும் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல் பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால் பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. தமிழ் மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்து கொள்ள அரியலூரும், பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

42. பொன்மொழிகளை மொழிபெயர்க்க:

i) Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval
ii) An early morning walk is a blessing for the whole day - Henry David Thoreau
iii) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru
iv) The biggest problem is the lack of love and charity - Mother Teresa
v) You have to dream before your dreams can come True - A.P.J.Abdul Kalam

*(அல்லது)*

மொழிபெயர்க்க:

1. Linguistics - ________ 2. Literature - ________
3. Philologist - ________ 4. Polyglot - ________
5. Phonologist - ________

Padasalai

பகுதி - IV (மதிப்பெண்கள் 16)

**விரிவாக விடையளிக்க:** 2 x 8 = 16

43. அ) உங்கள் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக. *(அல்லது)*

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

44. அ) முன்னுரை - நீரின்றி இயங்காது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர் நிலைகள் - நீர் பற்றாக்குறை ஏற்படக் காரணம் - நீரைச் சேமித்தல் - நிலத்தடி நீர் மட்டம் - முடிவுரை.

*(அல்லது)*

ஆ) முன்னுரை - சுற்றுப்புறச்சூழல் - காற்று மாசுபடுதல் - நீர் மாசுபடுதல் - நிலம் மாசுபடுதல் - மாசுக் கட்டுப்பாடு - மழைநீர் சேகரிப்பு - உலகைக் காப்போம் - முடிவுரை

(மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு பொருத்தமான தலைப்பு இட்டு எழுதுக.)

******